# 2021 ம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. கு. அசோக்குமார்,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் அறிவுரைப்படி சட்ட மன்ற தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு அரசியல் கட்சிகளின் சுவர் விளம்பரங்களை, பேனர்களை அகற்ற தேவையான பொருட்களை வாங்குவதற்கும் மேற்படி பணியை மேற்கொள்வதற்கும் ஆகும் தோராய செலவினத் தொகை ரூ. 0.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 5240/2016/எப்1)

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டிரவம் கழிவறை கட்டிடத்தின் மேல் பகுதியில் EB லைன் HT/CT இடையூராக செல்வதால் அதனை மாற்றித் தர கோரி உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கண்டியங்கப்பம் பிரிவு, விருத்தாசலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், தற்போது மேற்படி HT/CT லைனை மாற்றி அமைக்க மதிப்பீட்டு கட்டணம் ரூ. 1,12,890/– செலுத்தக் கோரி கேட்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ. 1,12,890/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். 659/2019/இ1)

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் மாவட்ட கனிமவள நிதி (District Mineral FundationTrust) திட்டத்தின் கீழ் 5 எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை இயக்குனர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்கள் மூலமாக Flame Advertising Co. Pvt. Ltd., Chennai நிறுவனம் மூலம் கீழ்கண்ட தினசரி நாளிதழ்களில் வெளியிட்டதற்கான தொகை கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | தொகை ரூ | வெளியீட்டு ஆணை எண்/நாள் |
|---|---|---|---|
| 1. | India Express | 48750.00 | 1122/ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் 2021/நாள். 16.02.2021. |
| 2. | நமது புரட்சி தலைவி அம்மா | 36000 | |
| | GST | 2118.75 | |
| | SGST | 2118.75 | |
| | Round off | 0.50 | |
| | **மொத்தம்** | **88988** | |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 2716/2020/இ1)

**<u>பொருள் எண். 4.</u>**

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டு சந்தா தொகை மற்றும் அதற்கான GST தொகை 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டிற்கு செலுத்தவேண்டியுள்ளது. விபரம் பின்வருமாறு.

01.07.2019 முதல் 30.06.2020 வரை

| | | |
|---|---|---|
| சந்தா ரூ. 2100x140 பணியாளர்கள் | = | 294000 |
| GST 2100x18 % = 378 x 140 | = | 52920 |
| | | **346920** |

01.07.2020 முதல் 30.06.2021 வரை

| | | |
|---|---|---|
| சந்தா ரூ. 2100x136 பணியாளர்கள் | = | 285600 |
| GST 2100x18 % = 378 x 136 | = | 51408 |
| | | **337008** |

மேற்கண்ட 2019–2020க்கான தொகை ரூ. 346920/– மற்றும் 2020–2021 க்கான தொகை ரூ. 337008/– ஆக கூடுதல் ரூ. 683928/– உரிய கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4660/2008/பி3)

**<u>பொருள் எண். 5 .</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு எதிராக திரு. பி. மணிவண்ணன் என்பவர் வரன்முறை செய்யப்படாத மனைப்பகுதியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி வழங்கவில்லை என சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (எண். 16815/20) தொடர்ந்துள்ளார். மேற்படி இடம் வரன்முறை செய்யப்படாத பகுதி என்பதாலும். ஏற்கெனவே கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாலும் மேற்படி மனுதாரருக்கு கட்டிட அனுமதி வழங்க இயலாது என எதிர் வாதுரை செய்யப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகிய கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு. எம். ஏழுமலை என்பவர் கோரியதற்கிணங்க, வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 627/2021/எப்1)

**<u>பொருள் எண். 6 .</u>**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், விண்ணப்பங்கள், எழுது பொருட்கள், கணினி பிரிண்டர்கள், கார்பன்கள், வெள்ளை தாள்கள் மற்றும் நோட்டுகள் வாங்குவதற்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்கோ சர்வ் நிறுவனம் திருச்சியில் வாங்கிக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 5,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>பொருள் எண். 7.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு எதிராக திரு. அ. வாஹித்கான் என்பவர் பாலக்கரை ரவுண்டானா டாக்டர் இளவரசன் மருத்துவமனைக்கு பின்புறமுள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தர கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். 34564/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பில் வருவாய் வட்டாட்சியர் ஆக்கிரமிப்பை அகற்றித்தர தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் பிரதிவாதி 4 ஆம் எதிர்வாதியாக விருத்தாசலம் நகராட்சி ஆணையாளரை சேர்த்து Contempt Petition எண். 1035/2020ல் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திருமதி. ஸ்ரீஜெயந்தி சிறப்பு அரசு வழக்கறிஞர் ஆஜராகி வாதாடிடவும் அதற்கான வழக்கறிஞர் கட்டண செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 582/2020/எப்1)

**<u>பொருள் எண். 8.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித் தொகைகளுக்கான காலாண்டு வாரியான மின்னனு (e-filling) பதிவு செய்வதற்கும், ஒப்பந்ததாரர்கள் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி தொகைகளுக்கான மாதவாரியான மின்னனு (e-filling) பதிவு செய்வதற்கும், பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொகைகளுக்கான காலண்டு வரியான மின்னனு (e-filling) பதிவு செய்வதற்கும், குத்தகைதாரர்களிடம் வசூல் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி தொகைகளுக்கான மாதவாரியான மின்னனு (e-filling) பதிவு செய்வதற்கும், தோராய செலவினம் ரூ. 1,50,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 9 .</u>**

இந்நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கும் தேவைப்படும் சீல்களின் விபரம் கோரியதில் 35 சீல்கள் செய்து தர வேண்டியுள்ளதால் உள்ளூர் அச்சகமான ஆனந்தா அச்சகத்தில் பட்டியல் பெறப்பட்டது. பட்டியல் தொகை 35 சீல்களுக்கு ரூ. 3950/– என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை செலுத்தி சீல்கள் செய்து பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 1081/2021/சி1)

**பொருள் எண். 10 .**

விருத்தாசலம் நகராட்சி குத்தகை இனங்கள் பேருந்து நிலைய கட்டண கழிவறை உரிமம், ஆடு அறுக்கும் தொட்டி உரிமம் 09.02.2021 மற்றும் 5.3.2021ல் ஏலம் விடப்பட்டது. மேற்கண்ட ஏலம் போகாத இனங்களுக்கு துறை ரீதியாக வசூல் செய்யவேண்டியுள்ளதால்அதற்குண்டான ரசீது புத்தகம் அச்சடிக்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 50000/– மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனங்களுக்கு ஆண்டு தோறும் எடுக்கப்படும் இன்சூரன்ஸ், சாலை வரி, 1 சதவீதம் வரி மற்றும் பசுமை வரி புதுப்பிப்பதற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு செலுத்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவின தொகையினை 2021–2022 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 4171/2017/எச்1)

**பொருள் எண். 12.**

அம்மா உணவக பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண். (4D) No.2,நாள். 26.02.2021ல் சென்னை மாநகராட்சி தவிர்த்து அனைத்து நகராட்சி மற்றும் பெரு நகராட்சி அம்மா உணவகங்களின் சுய உதவி குழு மூலம் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் தினக்கூலி தொகை நாள். ஒன்றிற்கு ரூ. 250/– லிருந்து ரூ. 325/– ஆக உயர்வு செய்து அரசாணை வெளியிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்படி அரசாணையின்படி, இந்நகராட்சி அம்மா உணவகப் பணியாளர்கள் 12 நபர்களுக்கும் நாள் ஒன்றிற்கு ரூ. 325/– தினக்கூலியாக வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமக்கலாம். (ந.க.எண். 5180/2011/எப்1)

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 60000/– மதிப்பீட்டில் நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் உள்ள பிரிண்டர்களின் டோனர்கள் ரீபிள் மற்றும் சர்வீஸ் செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 4219, நாள். 24.02.2021ல் அனுமதியளித்ததற்கிணங்க 05.03.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பிரிண்டர் கேர்,<br>28/75, பங்களா தெரு,<br>புதுப்பேட்டை,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 380/- (1 No)<br>Drum Change –<br>Rs. 355/- (1 No) |
| 2. | S.M.T. Infotech,<br>36,புதுப்பேட்டை,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 400/- (1 No)<br>Drum Change –<br>Rs. 400/- (1 No) |
| 3. | M.S.N. Infotech,<br>விருத்தாசலம். | Toner Refilling –<br>Rs. 450/- (1 No)<br>Drum Change –<br>Rs. 450/- (1 No) |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் பிரிண்டர் கேர், 28/75, பங்களா தெரு, புதுப்பேட்டை, விருத்தாசலம் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 14.**

இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி, வட்டி, அரசு மான்யம் ஆகியவை வழங்கிட கோரி பணியாளர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் விண்ணப்பம் அளித்துள்ளார்கள் எனவே 2021–2022 ஆம் ஆண்டுக்கு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மற்றும் இறந்த பணியாளர்கள் வாரிசுகளுக்கு சிறப்பு சேமநலநிதி, அதற்கான வட்டித் தொகை, அரசு மான்யம் ஆகியவை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 15 .**

விருத்தாசலம் நகராட்சியில் கடந்த ஆறு மாதங்களில் 15வது நிதிக்குழு மான்யம் தொடர்பான பிரேரணைகள் அனுப்பிட 5 ஆண்டுகளின் கணக்குகள் 5 நகல்கள் ஜெராக்ஸ் எடுத்த வகையில், மாநில கணக்காயர் தணிக்கைக்காக எடுத்த வகையில் மாநில கணக்காயர் தணிக்கை பத்திகளுக்கு பத்தி எண். 1 முதல் 73 முடிய பதில்கள் 3 நகல்கள் ஜெராக்ஸ் எடுத்த வகையில் மற்றும் EPF திருச்சி அலுவலகத்திற்கு ஆவணங்கள் அனுப்பிட 2010–2011 முதல் 2020–2021 முடிய ஜெராக்ஸ் எடுத்தது மற்றும் துப்புரவு பணியாளர்கள் வருகை பதிவேடு 2010–2011 முதல் 2020–2021 முடிய நகல் எடுத்தது ஆகியவைகளுக்கான தொகை ரூ. 24,450/– ஐ விருத்தாசலம் பாலாஜி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 16.**

விருத்தாசலம் நகராட்சி பகுதிகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டு 20.10.16க்கு முன் முழுவதும் விற்கப்பட்ட அனுமதியற்ற மனை பிரிவுகளை அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 04.05.2017, அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13193/2017/எல் ஏ1, நாள். 27.03.2018ன்படி SPFW. No. 2, 2021/க.மா, நாள். 26.03.2021 ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் கீழ்காணும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை பொது உபயோகங்களுக்காக பொது சாலையாக நகர் மன்றம் உரிய தீர்மானம் இயற்றி எடுத்துக்கொண்டு அதன் பிறகு விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறை செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாலைகளை எடுத்துக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**மனைப்பிரிவு விபரம்:**

| வ.எண். | மனைபிரிவின் பெயர் | கிராமத்தின் பெயர் மற்றும் சர்வே எண் | நகர் ஊரமைப்பு அனுமதி உத்தரவு எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1. | பெயரிடப்படாத நகர் | விருத்தாசலம் கிராமம் (307/5பகுதி) | SPFW. No. 2, 2021/க.மா, நாள். 26.03.2021. |

மேற்கண்ட மனைப்பிரிவில் அமையும் சாலை எண். 1, தென் வடல் 260 அடி கீழ் மேல் 30 அடி சாலை எண். 2, கீழ்மேல் 180 அடி தென் வடல் 22 அடி சாலை எண். 3, தென் 8வடல் 50 அடி கீழ்மேல் 18 அடி ஆகிய சாலைகளை மன்றம் பொது சாலையாக அங்கீகரிக்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்கவும், அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்கவும் மேற்படி மனை பிரிவில் அமையும் சாலைகளை பொது சாலையாக ஏற்று அறிவிக்கலாம்.

**(ந.க.எண். 2349/17/எப்1)**

**பொருள் எண். 17.**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனா Covid – 19 இரண்டாவது அலை மிக வேகமாக பரவி வருவதால் அனைத்து பகுதிகளிலும் உள்ள 20205 வீடுகளுக்கும் கொரோனா Covid – 19 முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக காய்ச்சல் சம்மந்தமான கணக்கெடுப்பு நடத்துவதற்காக தெர்மா மீட்டர் மற்றும் ஆக்ஸிமீட்டர் வாங்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 1,50,000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 18.**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனா Covid – 19 இரண்டாவது அலை மிக வேகமாக பரவி வருவதால் அனைத்து பகுதிகளிலும் உள்ள 20205 வீடுகளுக்கும் கொரோனா Covid – 19 முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக காய்ச்சல் சம்மந்தமான கணக்கெடுப்பு நடத்துவதற்காக தெர்மா மீட்டர் மற்றும் ஆக்ஸிமீட்டர் வாங்கும் பணிக்கு 20.05.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விபரம் | விலை |
|---|---|---|---|
| 1. | Easorn Pharma,<br>No. 244A, Lenin Street,<br>Kosapalayam,<br>Puducherry. | Pulse Oximeter | 800/-<br>(ஒன்றின் விலை) |
| | | Infra Red Thermometer | 1200/-<br>(ஒன்றின் விலை) |
| 2. | Laxmi Balaji Pharma,<br>Paramedical Distrubutors,<br>Puducherry. | Pulse Oximeter | 850/-<br>(ஒன்றின் விலை) |
| | | Infra Red Thermometer | 1250/-<br>(ஒன்றின் விலை) |
| 3. | L E Pandi,<br>No. 101, Cuddalore Road,<br>Mudaliarpet,<br>Puducherry. | Pulse Oximeter | 900/-<br>(ஒன்றின் விலை) |
| | | Infra Red Thermometer | 1300/-<br>(ஒன்றின் விலை) |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் Easorn Pharma,No. 244A, Lenin Street, Kosapalayam, Puducherry என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 19.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வயலூர் கிராமம் வார்டு எண்.A பிளாக் எண் 19 நகரளவு எண்6/3ல் 1.12 ஏக்கர் அல்லது 48787.20 சதுரஅடி பரப்பளவு கொண்ட "குப்புசாமி நகர்'' மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (U(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017 ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். 195/2018 என எண்ணிட்டு நாள். 16.04.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.கு.முருகன் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –1946.00 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானபத்திர எண். 1694, நாள். 26.04.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2076/2021/எப்1)

**<u>பொருள் எண். 20.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாச்சலம் கிராமம் வார்டு–இ, பிளாக் எண்.50, (பழைய நகரளவு எண்.6/3,6/4,6/5,6/8A) புதிய நகரளவு எண்.7/3,7/4,7/5,7/6,7/32 ஆகியவற்றில் 2.00 ஏக்கர் அல்லது 8094.00 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1 நாள் 08.09.2017 மற்றும் அரசாணை(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(M.1) நாள்.04.02.2019ன் படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண் 640/2020/கமா நாள்16.03.2021ன் படியும் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.இ.எண். 01/2021 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. E. தங்கம் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –405.00 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானபத்திர எண். 4526, நாள். 29.12.2020 ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அனுமதி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.6084/2020/எப்1)

**<u>பொருள் எண். 21.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் புல எண். 54/6ஏ–ல் நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா இடம் தொடர்பாக திரு. டி. சுப்பிரமணியன் மற்றும் பலர் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் AS.No. 19/2015, O.S.No. 422/2007 மற்றும் I.A.No. 231/2020, O.S.No. 154/2015 வழக்குகளில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பாக முன்னிலை ஆகிய நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. ஜி. பாலச்சந்தர் அவர்கள் தனது 2.04.2021 ஆம் தேதிய இரு கடிதங்கள் மூலம் O.S.No. 422/2007 க்கான வழக்கறிஞர் ஊதியம் உட்பட ரூ. 30,000/– மும் O.S.No. 154/2015 ல் வழக்கறிஞர் ஊதியம் உட்பட ரூ. 6000/– மும் வழங்க கோரியுள்ளார். மேற்படி இரு வழக்குகளிலும் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை பெறப்பட்டுள்ளதால், வழக்கறிஞர் கட்டணத்தை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 5832/2017/எப்1)

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சியில் கீழ்கண்ட மாசிமக திருவிழா முன்னேற்பாடு பணிகள் , குளத்து நீர் பரிசோதனை பணிகள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் பொறியியல் பிரிவு வாகனம் பணிகள் போன்ற பணிகள் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | மாசிமக திருவிழாவிற்கு மணிமுத்தாற்றில் உயர்மின் கோபுர விளக்குகள் , சோடியம் ஆவி விளக்குகள் , குழல் விளக்குகள் மற்றும் தெப்ப திருவிழாவினை முன்னிட்டு புதுப்பேட்டை அம்மன் குளத்தினை சுற்றி விளக்குகள் அமைக்கும் பணி. | ராசி அண் கோ, விருத்தாசலம். | 160000/– |
| 2. | மாசிமக திருவிழாவினை முன்னிட்டு மணிமுத்தாற்றை JCB மற்றும் HITTACHI கொண்டு சுத்தம் செய்யும் பணி. | ராசி அண் கோ, விருத்தாசலம். | 161200/– |
| 3. | மாசிமக திருவிழாவினை முன்னிட்டு மணிமுத்தாற்றில் சவுக்கு மரம் கொண்டு தடுப்பு கட்டை அமைத்தல் , ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே கழிவறை , துணி மாற்றும் அறை மற்றும் பேனர் அமைக்கும் பணி. | ராசி அண் கோ, விருத்தாசலம். | 160000/– |
| 4. | நகராட்சிக்குட்பட்ட 6 குளங்களில் சேகரிக்கப்பட்டுள்ள நீரினை பரிசோதனை செய்து பரிசோதனை அறிக்கை அளிக்க கட்டணம் செலுத்துதல் | மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம், பிளாட் நம்பர் ஏ3 , சிப்காட் தொழிற்பேட்டை, குடிகாடு,கடலூர். | 26340/– |
| 5. | விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண் TN 31 AZ 5697 வாகனம் பழுது நீக்கம் செய்யும் பணி | Vijayalakshmi Automobiles, Semmandalam, cuddalore | 22774/– |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 23.**

விருத்தாசலம் நகராட்சியில் மாசிமக திருவிழா 2020 , கொரானோ முன்னெச்சிரிக்கை பணிகள் , வடக்கிழக்கு பருவ மழை முன்னெச்சிாக்கை பணிகள் , குடிநீர் பணிகள் , தேர்தல் பணிகள் போன்ற பணிகளின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர்(ம) நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | மாசிமக திருவிழா – 2020 முன்னிட்டு மணிமுத்தாற்றை JCB மற்றும் HITTACHI கொண்டு சுத்தம் செய்யும் பணி. | ராசி அண் கோ, விருத்தாசலம். | 124350/– |
| 2. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கொரானோ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்கும் பணி , பேரிகார்டு அமைக்கும் பணி மற்றும் கொரானோ தொடர்பான முன்னெச்சரிக்கை பணிகளை போட்டோ மற்றும் வீடியோ ஆல்பமாக எடுத்து Documentation செய்து தரும் பணி. | **Q studios, 20,Velunachiyar street, MGR nagar,Chennai-78** | **118000/–** |
| 3. | விருத்தாசலம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண் 28 மணலூர் மெயின் ரோட்டில் உள்ள மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணி | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | **54900/–** |
| 4. | வார்டு எண் 1 வயலூர் காலனி சிண்டெக்ஸ் டேங்க் மற்றும் வால்வு பழுது நீக்கும் பணி | திரு.ஜி.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | **19500/–** |
| 5. | வார்டு எண் 32 பெண்ணாடம் ரோடு சிவபூஜா திருமண மண்டபம் அருகில் பைப்லைன் லீக்கேஜ் சீர் செய்யும் பணி | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | **12500/–** |
| 6. | மாசிமக திருவிழாவினை முன்னிட்டு மணிமுத்தாற்றில் PVC பைப்லைன் அமைக்கும் பணி | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | **49500/–** |

| | | | |
|---|---|---|---|
| **7.** | வார்டு எண் 5 நாச்சியார்பேட்டை பாலாம்பிகை நகரில் புதிய பைப்லைன் மற்றும் சிண்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி | திரு.ஜி.பாலசுப்பிரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | **57500/–** |
| **8.** | வார்டு எண் 6 ஜங்ஷன் ரோடு இளவரசன் மருத்துவமனை பின்புறம் புதிய பைப்லைன் அமைக்கும் பணி | திரு.ஜி.பாலசுப்பிரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | **44000/–** |
| **9.** | வார்டு எண் 27 ராமசந்திரன்பேட்டையில் பம்பிங் மெயின் பழுது நீக்கும் பணி | திருமதி.கே.சாந்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | **14500/–** |
| **10.** | வார்டு எண் 27 ராமசந்திரன்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு அருகில் பைப்லைன் லீக்கேஜ் சீர் செய்யும் பணி. | திருமதி.கே.சாந்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | **16500/–** |
| **11.** | தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டு நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள அனைத்து வாக்குசாவடி மைய கட்டிடத்தில் மின்விசிறி ,மின்விளக்கு பழுது பார்த்தல் , மாற்று திறனாளிகளுக்கு சாய்வு தளம் அமைத்தல் மற்றும் கட்டிடத்தில் உள்ள தரைகள் பழுது பார்த்தல், பூச்சு வேலை செய்து வர்ணம் பூசுதல் பணி | திரு.வி.ரமேஷ்,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | **134000/–** |
| **12.** | வார்டு எண் 6 பாலக்கரை அம்மா உணவகத்தில் உள்ள Steam Boiler & Idly Boiler பழுது நீக்கும் பணி | SATHYA AGENCIES,<br>JUNCTION ROAD,<br>VRIDDHACHALAM | **164020/–** |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 24.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 31 சாத்துக்கூடல் ரோடு 8” AC பம்பிங் மெயினில் புதியதாக CID Joint , Ring மற்றும் Bolt Nut போட்டு Joint செய்யும் பணி | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | 29460/– |
| 2. | வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் மற்றும் பெரியார் நகர் தெற்கு பகுதியில் 6” மற்றும் 8” Gate வால்வு மாற்றும் பணி | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | 17300/– |
| 3. | வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகரில் புதிய பைப்லைன் அமைக்கும் பணி | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | 20000/– |
| 4. | வார்டு எண் 18 பூதாமூர் முனியப்பர் கோவில் தெரு OHTக்கு செல்லும் 5 “பைப் லைன் லீக்கேஜ் சீர் செய்யும் பணி | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | 38860/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 25.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 4,50,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் அவ்வை தெருவில் விடுபட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.4155, நாள்.29.01.2021ல் அனுமதியளித்தற்கிணங்க 26.02.2021 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.01 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.36 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2037 /2020/இ1)

**பொருள் எண். 26.**

விருத்தாசலம் நகராட்சியில் மாவட்ட கனிமவள நிதி (District Mineral Foundation Trust) 2020–2021 கீழ் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 2 புதுக்குப்பம் JJ நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி உடன் இணைந்த புதிய போர்வெல் மற்றும் பம்பு அறை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர்,கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 487/Mines/2016 , நாள். 19.11.2020ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 11.03.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s Rasi & Co,<br>Contractor, Vriddhachalam | (+) 4.98 % அதிகம் |
| 2 | Thiru.K.Rajack,<br>Contractor,<br>97/4 , Agathiar street,<br>Vriddhachalam | (+) 9.01 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Rasi & Co Contractor,Vriddhachalam.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.98 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. குடிநீர் மற்றும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2176/20/இ1 – 1)

**<u>பொருள் எண். 27.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் மாவட்ட கனிமவள நிதி (District Mineral Foundation Trust) 2020–2021 கீழ் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி உடன் இணைந்த புதிய போர்வெல் மற்றும் பம்பு அறை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர்,கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 487/Mines /2016,நாள். 19.11.2020ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 11.03.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s Rasi & Co,<br>Contractor,<br>Vriddhachalam | (+) 4.98 % அதிகம் |
| 2 | Thiru.K.Rajack,<br>Contractor,<br>97/4 , Agathiar street,<br>Vriddhachalam | (+) 9.01 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Rasi & Co Contractor,Vriddhachalam.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.98 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் மற்றும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2176/20/இ1 – 2)

**பொருள் எண். 28.**

